5/1/22

5/1/22

**சுருக்கம்**

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை – கலை மற்றும் பண்பாடு – மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் வயலின் பிரிவிற்கு அரசுத் தேர்வுத்துறையால் வழங்கப்படும் சான்றிதழ் – ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்படும் இசையாசிரியர் பணிக்கான அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்ப கல்வித் தகுதிக்கு இணையானது என அறிவித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்1–2) துறை**

அரசாணை (நிலை) எண்.221

நாள் 23.12.2021
திருவள்ளுவராண்டு–2052
பிலவ, மார்கழி 8

**படிக்கப்பட்டவை :–**

1. கலை பண்பாட்டுத்துறை ஆணையரின் கடிதம் ந.க.எண்.5694/அ3/2019, நாள் 17.10.2019 மற்றும் 24.03.2020, 18.06.2021 மற்றும் 22.10.2021.
2. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் ஐந்தாவது சமநிலைக்குழுவின் 07.01.2021 மற்றும் 12.01.2021 நாளிட்ட கூட்ட நடவடிக்கை குறிப்பு.

*******

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கலை பண்பாட்டுத்துறை ஆணையரின் கடிதத்தில் கலை பண்பாட்டுத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் சேலம் மாவட்ட அரசு இசைப் பள்ளியில் பயின்ற மாணவி ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்பட்ட இசையாசிரியர் பணிக்கான தேர்வில் தேர்ச்சி பெற்று 13.08.2018 அன்று சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெற்றதாகவும், இச்சான்றிதழ் சரிபார்ப்பில் இசைப்பள்ளியில் மூன்றாண்டுகள் படித்தபின் வழங்கப்படும் தேர்ச்சி சான்றிதழ் அங்கீகரிக்கப்பட மாட்டாது என ஆசிரியர் தேர்வு வாரியத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும், அதனடிப்படையில் கலை பண்பாட்டுத்துறை மூலம் மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் தேர்ச்சிச் சான்றிதழ், ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படுகின்ற சிறப்பு இசையாசிரியர் பணிக்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள Technical Qualification–க்கு இணையானது என சான்றளிக்குமாறு கலை பண்பாட்டுத்துறை ஆணையர் அரசினைக் கேட்டுக்கொண்டார்.

த.பி.பா.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் ஐந்தாவது சமநிலைக் குழுவின் கூட்ட நடவடிக்கைக் குறிப்பில் கலை பண்பாட்டுத் துறை சார்பாக தீர்மான எண்.38–ல் மாவட்ட இசைப்பள்ளிகளில் வழங்கப்படும் வயலின் இசைக்கான சான்றிதழ்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படுகின்ற சிறப்பு இசையாசிரியர் பணிக்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப கல்வித் தகுதிக்கு இணையானது என கீழ்க்காணுமாறு தீர்மானம் இயற்றப்பட்டது:–

| | |
|---|---|
| Resolution No.38<br><br>Public Services – Educational Qualification – Consideration of Music – Violin offered by District Music School Pass Certificate by Department of Government Examinations, Tamil Nadu as to whether equivalent to the qualifications prescribed by the Teachers Recruitment Board for the post of Special Teachers (Music). | Equivalent |

3. மேலும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் ஐந்தாவது சமநிலைக்குழுவின் கூட்ட நடவடிக்கை குறிப்பில், கலை பண்பாட்டுத் துறை மூலம் மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் தேர்ச்சி சான்றிதழ் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் சிறப்பு ஆசிரியர் பணிக்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப கல்வித்தகுதிக்கு இணையானது என கீழ்க்காணுமாறு பரிசீலிக்கப்பட்டு தீர்மானம் (எண்.38) இயற்றப்பட்டுள்ளது:–

| Nomenclature Degree | Awarded by | % | Equivalent to | Remarks |
|---|---|---|---|---|
| 1a. Sangeetha Bhushana (or) Isai Kalaimani from 1990 onwards (Schedule I to the General Rules for the Tamilnadu State and Subordinate Services) | Annamalai University | 75 | Music – Violin<br><br>District Music School passing certificate offered by Department of Government Examinations in Tamilnadu | Equivalent |
| 1b. Sangeetha Vidwan (or) Isai Kalaimani from 1990 onwards (Schedule I to the General Rules for the Tamilnadu State and Subordinate Services) | Director of Government Examinations Madras | 76 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2a. Higher Grade in Music | Technical Examination Certificate and Technical Teachers Certificate | 76 | | |

4. மேலே பத்தி 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை ஆய்வு செய்து அரசு கீழ்க்காணுமாறு ஆணையிடுகிறது:–

"தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் ஐந்தாவது சமநிலைக்குழுவின் கூட்ட நடவடிக்கை குறிப்பு (Equivalence Committee) தீர்மானத்தை ஏற்று, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் சிறப்பு ஆசிரியர் (இசை) பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்வித் தகுதிக்கு மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் வயலின் பாடப்பிரிவிற்கு வழங்கப்படும் சான்றிதழ் கீழ்க்கண்டவாறு இணையானது என ஆணை பிறப்பிக்கப்படுகிறது:–

| Nomenclature Degree | Awarded by | Equivalent to |
|---|---|---|
| Sangeetha Bhushana (or) Isai Kalaimani from 1990 onwards<br>(Schedule I to the General Rules for the Tamilnadu State and Subordinate Services) | Annamalai University | Music – Violin District Music School passing certificate offered by Department of Government Examinations in Tamilnadu. |
| Sangeetha Vidwan (or) Isai Kalaimani from 1990 onwards<br>(Schedule I to the General Rules for the Tamilnadu State and Subordinate Services) | Director of Government Examinations | |
| Higher Grade in Music | Technical Examination Certificate and Technical Teachers Certificate | |

மேலும் மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் வயலின் பாடப்பிரிவிற்கு வழங்கப்படும் சான்றிதழ் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் சிறப்பு ஆசிரியர் (இசை) பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்வித் தகுதிக்கு இணையானதாகக் கருதி பொதுப்பணிகளில் வேலை வாய்ப்பிற்காக அங்கீகரிக்கலாமெனவும் அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை பள்ளிக் கல்வி/உயர்க் கல்வித்துறைகளின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.25594/ப.க.3(1)/2021-1, நாள்.10.12.2021 மற்றும் 21821/K1/2021, நாள் 22.12.2021-வின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை 600 008.
தலைமை ஆசிரியர், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள்
(கலை பண்பாட்டுத் துறை ஆணையர் வழியாக)
தலைவர், ஆசிரியர் தேர்வாணையம், சென்னை 600 006.
பதிவாளர், அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம் 608 002.
இயக்குநர், அரசு தேர்வுத்துறை, சென்னை 600 006.
இயக்குநர், தொழில் நுட்பக் கல்வித்துறை, சென்னை 600 025.
நகல்
பள்ளிக் கல்வித் துறை, சென்னை 600 009,
உயர்க் கல்வித்துறை, சென்னை 600 009,
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை 600 009,
தலைவர், சமநிலைக்குழு,
தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், சென்னை 600 005
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (தொழில்) துறை அலுவலகம், சென்னை 600 009.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை 600 009
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.